Volume 4 Issue 2 February 2023 E-ISSN: 2582-2063

# வள்ளல் பாரியும் பறம்பு மலையும் - ஓர் ஆய்வு

**ம.லெட்சுமணன்**
பி.ஏ.மூன்றாம் ஆண்டு, வரலாற்றுத்துறை
நாகரத்தினம் அங்காளம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மதுரை.

**முனைவர் ரா.தாமரைக்கண்ணன்**
உதவிப்பேராசிரியர், வரலாற்றுத்துறை
நாகரத்தினம் அங்காளம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மதுரை.

**முன்னுரை:**

சங்க கால கடை ஏழு வள்ளல்களில் ஒருவர் பாரி ஆவார். இவர் பறம்பு மலையைச் சுற்றியுள்ள 300 ஊர்களை ஆட்சி செய்து வந்தவர் ஆவார். இவர் வீரமும் கொடை உணர்வும் ஒரு சேர அமைந்த உன்னதமான குறுநில மன்னர் ஆவார். இவரைப்பறிறியும் இவரின் கொடுக்கும் குனத்தைப்பற்றி கபிலர் தனது பாடல்களில் பாடியுள்ளார். நாம் இந்தக் கட்டுரையில் பறம்பு மலையினைப்பற்றியும் அம்மலைப்பகுதியை ஆண்டுவந்த பாரியைப் பற்றியும் விரிவாக காண உள்ளோம்.

**பறம்பு மலை:**

காரைக்குடிக்கும் குன்றக்குடிக்கும் அருகில் உள்ள இன்றைய பிரான்மலையே அன்றைய பறம்புமலை என்று நூலாசிரியர் ஔவை துரைசாமிப் பிள்ளை கூறுகிறார். இதனை **க. அரங்கசாமி** என்பவர் கொங்கு நாட்டில் சத்திய மங்கல வட்டத்தில் உள்ள மலைப்பகுதியே பறம்பு மலை என்று குறிப்பிடுகிறார். ஆனால் பாரியின் பறம்புமலை என்பது சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி அருகே அமைந்தள்ள பிரான்மலை என்ற பறம்பு மலையே ஆகும். இந்த மலை தான் பறம்பு மலை என்று கூறுவதற்கு எடுத்துக்காட்டாக சிவன் குடைவரை கோவிலும் அதுசார்ந்த கல்வெட்டுகளும் காணக்கிடைக்கின்றன என்று ஒரு சாராரும் மற்ற சிலர் இலக்கிய வரலாறுபடி 300 ஊர்களைக் கொண்டது பறம்புலை என்பதை உறுதிபடுத்தும் விதமாக கொங்கு நாட்டின் பறம்பு மலையின் மேலே இன்றளவும் சில நூறு ஊர்களை உடையதாக இருக்கின்றது என்று முனைவர். **இரா. வடிவேலன்** கூறுகிறார்.

**பாரி:**

பறம்பு மலையை ஆட்சி செய்த குறுநில மன்னர்களில் தனித்துவமானவரும் வள்ளல்களில் ஒருவருமான பாரியின் குனநலன்களைப் பற்றி கபிலர் சிறந்த முறையில் தனது பாடல்களில் விளக்கியுள்ளார். கபிலரும் பாரியும் சிறந்த நண்பர்களாவர். பாரி வள்ளல் தன்னை புகழ்ந்து பாடி வரும் புலவர்களுக்கம் கலைஞர்களுக்கும் ஊர்கள் அனைத்தையும் பரிசாக கொடுத்தவன். அத்தகைய பெயர்பெற்ற பாரியின் சிறப்புகளை பற்றி பார்ப்போம்.

**மூவேந்தர்களுடன் போர்:**

வள்ளல்பாரியின் புகழைக் கண்டு பொறாமை கொண்ட மூவேந்தர்களான சேரர், சோழர், பாண்டியர்கள் குறுநில மன்னரான பரியின் பறம்பு மலைமீது போர்த் தொடுத்தனர். பாரியை வெற்றி கொள்ள முடியவில்லை. பாரியின் நண்பரான கபிர் மூவேந்தர்களை சந்தித்து வள்ளல் பாரியின் பெருமைகளையும் வீரத்தையும் எடுத்துரைக்கிறார். நீங்கள் எவ்வளவு நாள் முயற்சி செய்தாலும் பாரியை வெற்றி பெற முடியாது. ஆனால் முறுக்கேறிய நரம்புகளுடைய யாழை வாசித்துக் கொண்டு விறலிப்பெண்டிர் பின்னே வர ஆடல் பாடலுடன் பாரியிடம் செல்லுங்கள், அப்பொழுதுதான் அவன் தனக்குரிய பறம்பு மலையையும் நாட்டையும் ஒன்றாகக் கொடுத்து விடுவான். பறம்பு மலையை மட்டுமல்ல அவனையே கேட்டாலும் கொடுத்து விடுவான். அதோடு என்னைக் கேட்டாலும் கூடக் கொடுத்துவிடுவான். என்று வள்ளல் பாரியின் புகழைக் கபிலர் பாடியுள்ளார். கீழ்வரும் பாடல் வரிகள் அவற்றை எடுத்துரைக்கின்றன.

**“மரம் தொறும் பிணித்த களிற்றினர் ஆயினும்**
**புலம்தொறும் பரப்பிய தேரினர் ஆயினும்**
**தாளில் கொள்ளலின் வாளில் தாரலன்**
**யான் அறிகுவன்அது கொள்ளும் ஆறே**
**சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி**
**விரை ஒலி கூந்தல் நும் விறலியர் பின்வர**
**ஆடினிர் பாடினிர் செலினே**
**நாடும் குன்றும் ஒருங்கு ஈயும்மே.”**

**கபிலரும் பாரியும்:**

பாரியின் பெருமைகளைப் பல பாடலில் சிறப்பித்துள்ளார். அவற்றில் நாட்டு வளமும், வீரத்தைப்பற்றியும், கொடைச்சிறப்பையும் மகளிர் மாண்பு பற்றியும் பாடியுள்ளார். விறகியர் சுனையிலே மலர்ந்த நீல மலரின் தேன், கொள் என்னும் தானியத்திற்கு விதைத்த நிலத்தில் ஓடும் வளம் நிறைந்த நாடன் என்றும் அவன் இனிய பண்பை உடையவன் என்றும் அவனைப் பாடிச் சென்றால் சிறந்த பரிசுகளைப பெறுவாய் என்று பாடியுள்ளார். அந்த பாடல் கீழ்வருமாறு.

**“கொள்ளும் வயன்புலத்து உழைகால் ஆட**
**மாண்புடை நெடுவரைக் கோடுதொறு கிடிதரும்**
**நீரினும் இனிய சாயல்**
**பாரி ஒருவனும் அல்லன்**
**மாரியும் உண்டு ஈண்டு உலகுபுரப்பதுவே”** என்னும் தனது பாடலில் பதிவு செய்து வைத்துள்ளார்.

**பாரியின் இழப்பு:**

வள்ளல் பாரியின் வளத்தைப் பாடிய கபிலர் பாரி மூவேந்தர்களால் வஞ்சமாக கொல்லப்பட்ட போது பாரியை இழந்து பறம்பு மலையின் அவலத்தையம் பாரி மக்களின் வருத்தத்தையம் கபிலர் பல பாடல்களில் பாடியுள்ளார். பறம்பு மலையே முன்னர் இருந்த உன் வளம் எத்தகையது. மதுவும் ஊனும் சோறும் வேண்டினால் அளிப்பர் பலர். அதததகைய வளத்தோடு இருந்தபோது உனக்கு நான் நண்பனானேன். இன்று வள்ளல் பாரி வீழ்ந்து விட்டான். அவனுடைய மக்களை மணக்க உரியவரைத் தேடி செல்கிறேன். பெருமைபெற்ற பரம்பே கலங்கிச் செயலிழந்தவனாய்க் கண்ணீருடன் உன்னை வாழ்த்தி வணங்கிச் செல்கிறேன் என்பதை.

**“மட்டுவாய் திறப்வும் மைவிடை வீழ்பவும்**
**அட்டு அன்று ஆனாக் கொழுந்துவை ஊன்சோறும்**
**நாறு இருங் கூந்தற் கிழவரைப் படர்ந்தே- என்னும்**
**பாடலின் மூலம் வளக்கியுள்ளார் கபிலர்.”**

கருமை நிறக் கூந்தலை உடைய மகளிரின் தந்தையாகிய பாரியன் நாடு உயர்ந்த கோடுகளை உடையது. வீரக்கழல்களின் ஒலியின் ஓசை எங்கும் கேட்கும். புலவர்களை போற்றும் இயல்பை உடையவன் பாரி, பாரி நாட்டில் திணை, வரகு, அவரை, எள் எங்கும் அறுவடை நடக்கும். மலை நாட்டவர்கள் வருவார்க்கு தேன் பொன்றவை கொடுப்பர். நெய்யில் கடலை வறுத்து சோறாக்கி வருவோர்க்கு உண்ணச் செய்வர் இவ்வாறு இருந்த பறம்பு நாடு அனைத்தையும் இழந்து அழிந்துவிடும் என்று கபிலர் பின்வருமாறு பாடுகிறார்.

**“இரும்பல் கூந்தல் மடந்தையர் தந்தை**
**ஆடுகழை நரலும் சேட்சிமைப் புலவர்**
**பாடி யானாப் பண்பின் பகைவர்**
**ஓடு கழல் கம்பலை கண்ட**
**செருவெஞ் சேஎய் பெருவிறல் நாடே”** என்னும் பாடல் கபிலர் வருந்தி தம் பாடலில் பாடியுள்ளார். படர்ந்து செல்ல முடியாத முல்லைக் கொடிக்கே தேரினையே கொடுத்து அழியா பெயரை பெற்ற பாரி இன்றி இந்த பறம்பு மலை நாடு எத்தகைய துயரை அடையுமோ.

**முடிவுரை:**

குறுநில மன்னர்களில் தலைசிறந்தவர்களில் ஒருவராகவும் பல்வகைகளில் சிறப்புடனும் வளத்துடனும் இருந்த மலைப்பகுதியை ஆண்ட வேந்தருமான கடை ஏழு வள்ளல்களில் ஒருவருமான பாரி வள்ளலின் வீரத்தையும் கொடைத் தன்மையையும் எளியவர்க்கு உதவும் பண்பையும் கலைக்காக உயிரையும் கொடுக்கும் பண்பினையும் மேற்கூறிய சங்க இலக்கிய பாடல்கள் மூலமாக தெளிவாக காணமுடிந்தது.

**நூற்பட்டியல்:**


1. R.வடிவேலன், சங்க காலக் கொங்கு நாடு. பக்.107.
2. ஞா. தேவநேய பாவாணர், பழந்தமிழர் ஆட்சி, பக்,174-175.
3. S. இராமகிருஷ்ணன், தமிழர் அரசியல், பக்.3
4. புறநானூறு. பாடல் எண்.: 107-109, 111, 113,120.
5. லெ.ப.கரு. இராமநாதன் செட்டியார், சங்ககால தழிழர் வாழ்வு, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1964.